**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.46/2019</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 05.08.2025**

**பெயர் – சரவணன்**

**த/பெ – துரைசாமி**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.35 பி.எம்.**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. இந்த வழக்கு வாதிகள் நால்வரும் யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதிகளான நீலாதரன், சரோஜம்மாள், டில்லி எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீலாதரன் மற்றும் டில்லி எனது சகோதர்கள், சரோஜம்மாள் எனது தாயார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்களுக்கும் பாகம் வேண்டுமென்றும், எங்கள் சொத்தை யாரும் அபகரிக்க கூடாது என்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு சொத்தின் புல எண் 223/2, பதிய புல எண் 411.

2. இந்த வழக்கில் எ அட்டவணை சொத்து மற்றும் பி அட்டவணை சொத்தின் சர்வே எண் 223/2. புதிய சர்வே எண் சரியாக நினைவில் இல்லை. எ அட்டவணை சொத்து மற்றும் பி அட்டவணை சொத்தில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் 2 அட்டவணையிலும் பாகம் செய்யவில்லை செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இந்த எ அட்டவணை சொத்தின் 4 எல்லைகள் வடக்கு பக்கம் பிள்ளையார் கோவில் உள்ளது, கிழக்கு பக்கம் இராமலிங்க முதலியார் மணை, மேற்கு பக்கம் சுப்பிரமணிய முதலியார் மணை, தெற்குப்பக்கம் ஜானகி முதலியார் மணை உள்ளது. இந்த பி அட்டவணை சொத்தின் 4 எல்லைகள்– தெற்கு பக்கம் ரோடு, வடக்கு பக்கம் ஜானகி முதலியார் மணை, கிழக்கு பக்கம் இராமலிங்க முதலியார் மணை, மேற்கு பக்கம் சுப்பிரமணிய முதலியார் மணை உள்ளது.

3. எ அட்டவணை சொத்தின விஸ்தீரணம் 42 X 60 அடி உள்ளது. பி அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் 42 X 60 அடி உள்ளது. இந்த வழக்கு சொத்துக்கள் அனைத்தும் யாருடைய பெயரில் உள்ளது என்றால் பாதி எனது தந்தையார் துரைமுதலியார் பெயரிலும், மற்றொரு பாதி திருவேங்கட முதலியார் பெயரில் உள்ளது. எ அட்டவணை எனது தந்தை பெயரில் உள்ளது. பி அட்டவணை திருவேங்கட முதலியார் பெயரில் உள்ளது. அனைத்து சொத்துக்களும் எனது தந்தைக்கு அவரின்

தாய்மாமா கொடுத்த சொத்தாகும். கிரையம் பெற்ற சொத்து அல்ல. எனது தந்தை 2000– ஆம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தந்தையாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனது தாயருடன் சேர்த்து 6 வாரிசுகள். தாவா சொத்துக்கள் தவிர எனது தந்தை பெயரில் வேறு சொத்துக்களும் உண்டு. அந்த சொத்துகளுடைய சர்வே எண்கள் எனக்கு நினைவில் இல்லை.

4. தாவா சொத்து அல்லாமல் என் தந்தை பெயரில் சுமார் 1½ ஏக்கர் சொத்துக்கள் இருக்கும். மேற்சொன்ன சுமார் 1½ ஏக்கர் சொத்துக்களை இந்த வழக்கில் நான் உட்படுத்தவில்லை என்றால் சரிதான். **(இந்த கேள்வி எதிர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணைக்குட்பட்டு பதிவு செய்யப்படுகிறது).** எனது தாயார் பெயரில் உள்ள சொத்துக்களை விற்றுவிட்டார். எனது தந்தையாரின் வாரிசுகள் அனைவரும் தனித்தனியாக வீடு கட்டி தனித்தனியாக இருந்து வருகிறோம் என்றால் எனத தந்தை கட்டிய வீட்டில் தான் இருந்து வருகிறோம் தனியாக வீடு எதுவும் கட்டவில்லை. வாதிகள் அனைவரும் ஒரே வீட்டில் தான் இருந்து வருகிறோம் என்றால் சரிதான்.

4. 3ம் பிரதிவாதியான எனது சகோதரர் டில்லியும் எனது தந்தை கட்டிய வீட்டில் என்னுடன் தான் வசிக்கிறார் என்றால் சரிதான். நான் வசித்து வரும் வீட்டின் சர்வே எண் 411. சர்வே எண் 411 –ல் நானும் எனது சகோதரர் டில்லியும், எனது சகோதரியான 2ம் வாதி சசிக்கலாவும் சேர்ந்து வசிக்கிறோம். 1ம் பிரதிவாதி நீலாதரன் எந்த சர்வே எண்ணில் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார் என்றால் சர்வே எண் 411, உட்பிரிவு தெரியவில்லை. அவர் அதில் சுமார் 15 வருடங்களாக வாழ்ந்து வருகிறார்.

**( மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 01.05 பி.எம்.**